# DEPOSITION OF WITNESS

***IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, TIRUNELVELI.***

**O.S. No. 197 / 2022**

| | | |
|---|---|---|
| வா.சா.1 | – | பாத்திமுத்து |
| தந்தை பெயர் | – | காதர்முகைதீன் |
| கிராமம் | – | ஏர்வாடி |
| தாலுகா | – | நாங்குனேரி |
| சாதி | – | முஸ்லீம் |
| மதம் | – | இஸ்லாம் |
| தொழில் | – | – |
| வயது | – | 49 |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tmt.R.Jannath Meeyammal in accordance with the Provisions of Act X of 1873 on **the 05th day of December 2022.**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி. நான் இவ்வழக்கில் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்கண்ட ஆவணங்களை எனது வழக்கிற்காக குறியீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1. 12.8.2020 ம் தேதி எனது தாயார் நூர்ஜஹான் 05.01.2013 ம் ஆண்டு செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ததற்கான ஆவணம் வா.சா.ஆ.1.

2. 22.03.2021 ம் தேதி எனது தாயார் நூர்ஜஹான் அவர்களும் வழக்கின் 4 ம் பிரதிவாதியும் ஏற்படுத்திக் கொண்ட கிரய உடன்படிக்கை பத்திரம் download copy வா.சா.ஆ.2.

3. 22.03.2021ம் தேதி எனது தாயார் நூர்ஜஹான் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் கணிணி மூலமாக பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.3.

4. 22.3.2021ம் தேதி எனது தாயார் நூர்ஜஹான் வழக்கின் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.4.

5. 22.3.2021ம் தேதி எனது தாயார் என் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.5.

6. 22.3.2021ம் தேதி எனது தாயார் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.6.

(வாதியின் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக அவகாசம் கொடுக்கப்பட்டது.)